15.09.2025

O.S.No. 1/2024

PW1- அருள்ராஜ்– த/பெ. சிவனு நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.09.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து எனக்கு சொந்தமானது என பரிகாரம் கோரியுள்ளேன்.

2. தபசில் சொத்து எவ்வாறு எனக்கு உரிமையானது என்றால் 1909, 1964 ஆவணத்தின் படியும் மற்றும் 1984 பட்டா படியும் எனக்கு பாத்தியமானது.

3. 1964 ஆவணமும், 1984 பட்டாவும் இவ்வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

4. சிவனு நாடாரின் தகப்பனார் பெயர் என்ன என்றால் வைத்திலிங்க நாடார்.

5. வைத்திலிங்க நாடார் எப்போது காலமானார் என்றால் எனக்குத் தெரியாது. வைத்திலிங்க நாடார் எப்போது காலமானார் என்ற விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. வைத்திலிங்க நாடாருக்கு என் தகப்பனார் சிவனு நாடார் ஒருவர் மட்டுமே வாரிசு என்பதற்கான வாரிசு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

7. என் தாத்தா வைத்திலிங்க நாடாரின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சிவனு நாடார்.

8. தபசில் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5 சென்ட் ஆகும்.

9. தபசில் சொத்தின் ஸ்தலத்தில் என்ன நிலைமை உள்ளது என்றால் வேர்க்கடலை பயிர் செய்துள்ளேன்.

10. தபசில் சொத்தை நான் தான் அனுபவம் செய்தேன் என்பதற்காக வா.சா.ஆ.1–ஐத் தவிர வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயிர் செய்தவதற்கான அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. பிராது தபசில் சொத்தில் எனக்கு அனுபவம் இல்லை என்றும் தபசில் சொத்தைப் பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ.1 ஆவணமானது வைத்திலிங்க நாடார் மற்றும் குத்தாலிங்க நாடார் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சரிதான்.

13. நான் தாக்கல் செய்த பிராதில் வைத்திலிங்க நாடார் மற்றும் குத்தாலிங்க நாடாருக்கு இடையே எப்போது வாய்மொழி பாகம் ஏற்பட்டது என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

14. பிராது தபசில் சொத்தை பிரதிவாதி கடந்த 25.06.2007 ம் தேதி கிரையம் பெற்று அது முதல் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும் பிரதிவாதியின் சொத்தில் நான் தவறான உரிமை கொண்டு அனுபவம் செய்வதால் என் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

15. தபசில் சொத்திற்காக பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. என் தாத்தா பெயர் வைத்திலிங்க நாடார் என்று உள்ள ஒரே காரணத்தினால் பெயர் ஒற்றுமையை வைத்து 1909 ஆவணத்தில் உள்ள வைத்திலிங்க நாடார் பெயரானது என் தாத்தா பெயர் என கற்பனை செய்து தவறான உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல.

17. பிரதிவாதிக்கே தபசில் சொத்தில் உரிமை மற்றும் அனுபவம் இருப்பதால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்பதால் என் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/−J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.